1995 ஏப்ரல் 20]

கொண்டிருக்கிறோம். அது வந்தபிறகு, சங்ககிரியிலே இருக்கிற சப் கோர்ட், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட், ஜுடிசியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட், இவைகள் எலலாம் இணைந்து, ஒருங்கிணைந்த நீதிமன்றமாக அமைய இந்த அரசு நிச்சயமாக முயற்சியை மேற்கொள்ளும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதித்துறையில் உள்ள அனைத்து பிரிவுகளும் மிகவும் பழுதடைந்த பழைய கட்டிடங்களில் இயங்கி வருவதால், என்னுடைய தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், சங்ககிரி, இடைப்பாடி, திருச்செங்கோடு மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் அடையும் வண்ணம், இந்த ஆண்டே நடைமுறைப்படுத்த, அரசு முழு முயற்சிகளோடு பணிகளை மேற்கொண்டு இவ்வாண்டே கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுக்காலத்தில், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 25 கோடி ரூபாய் ஒதுக்கி, 77 திட்டங்களை 14 நீதிமன்றக் கட்டிடங்கள் மற்றும் 63 நீதிபதிகளின் இல்லங்களைக் கட்டுகின்ற அந்தப் பணியிலே ஈடுபட்டு இருக்கிறோம். இந்த ஆண்டு சில நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்டப் போகிறோம். அப்போது நிச்சயமாக சங்ககிரி இடம் பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 362, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

362—

தருமபுரி மாவட்டத்தைப் பிரித்தல்.

24800*—திரு. கே. முனிவெங்கடப்பன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அப்படி ஒரு செயற்குறிப்பு அரசிடத்திலே இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் மக்கள் தொகையில் சிறிய மாவட்டமாக இருந்தாலும், பரப்பளவிலே மிகப் பெரிய மாவட்டமாக விளங்கி வருகிறது. முன்பு அந்த மாவட்டம் முன்னேறாத மாவட்டமாக இருந்தது. இன்று இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான் முன்னேறி வருகிறது. மேலும் அந்த மாவட்டம், பல மலைப் பகுதிகளையும், அடர்ந்த காட்டுப் பகுதிகளையும் கொண்ட ஒரு மாவட்டமாக விளங்கி வருகிறது. அந்த மாவட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து, மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கக்கூடிய தருமபுரிக்கு வருவது என்றால், மிகவும் சிரமமான நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்போது இல்லை என்றாலும் கூட, எதிர்காலத்திலாவது இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை நடப்பதை யார் அறிவார் என்பதும், நாளை என்ன நடக்கும் என்பதும் தெரியாது. ஆனால் இப்போது அரசினுடைய குறிப்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற குறிப்பு இருக்கிறது. அது விரைவிலே நடைபெறும். அதற்கு அடுத்தபடியாக செங்கற்பட்டு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும். அதற்குப் பிறகுதான் மற்ற மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி அரசு ஆய்வு செய்யும்.

1995 ஏப்ரல் 20]

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகடூரை தலைமையிடமாக கொண்டு அதியமான் ஆண்டு கொண்டிருந்தார். அப்போது தனக்குக் கிடைத்த ஒரு அரிய கனியை அங்கேயிருந்த தமிழ் மூதாட்டி ஔவையாருக்குக் கொடுத்து அந்த ஔவையார் வாழ்ந்தால் தமிழ் உலகம் வாழும் என்பதை அறிந்து, அந்த மன்னவன் அரிய கனியை ஔவையாருக்குக் கொடுத்தார். அதற்கு ஏற்றவாறு இன்றைக்கு தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் ஆண்டு கொண்டிருக்கிற, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தினுடைய அமைச்சராக இருந்துகொண்டு, நல்ல காரியங்களை தர்மபுரி மாவட்ட மக்களுக்காக ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து அந்த மாவட்டம் என்னென்ன நன்மைகளை இது வரை பெற்றதோ, அதைக் காட்டிலும் அதிகமான நன்மைகளை, அதிகமான எழுச்சியை, அதிகமான வளர்ச்சியை இந்த நான்கு ஆண்டுக்காலத்திலே தருமபுரி மாவட்டம் எய்திருக்கிறது. ஆகவே அந்த நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கின்ற அந்த மாவட்டத்திற்கு, அந்த மாவட்டத்தை வளர்ச்சி பெறச்செய்த வகையிலே, தருமபுரி மாவட்டத்திற்கு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பெயரைச் சூட்டுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, பின்னாலே தள்ளப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளுக்கெல்லாம் இன்றைக்கு இருக்கிற அரசு திட்டமிட்டு முறையாக எல்லா காரியங்களையும் செய்து கொண்டு வருகிறது என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே பின்னாலே தள்ளப்பட்ட, பின்தங்கிய மக்கள் வாழ்கிற தருமபுரி மாவட்டத்திற்கும் பல்வேறு சிறப்பு நடைமுறைப்படி அதை முன்னேறிய மாவட்ட அளவிற்குக் கொண்டுவருவதற்கு இந்த அரசு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறது. ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதையும், எதிர்காலத்திற்கு வருகிற போது நான் முதலிலே சொன்னபடி இதற்கு முன்னாலே இருக்கிற பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து, அதற்கு ஏற்பாடுகள் செய்த பிறகுதான், இது செய்யப்படும். இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் 9 வருவாய் வட்டங்கள் தான் இருக்கின்றன. ஆனால் சேலம், அதேபோல் நம்முடைய செங்கற்பட்டு மாவட்டம், அதேபோல் நம்முடைய திருச்சி மாவட்டம், இவைகள் எல்லாம் பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் பிரிப்பது பற்றி வரிசைக்கிரமப்படிதான் வரும்.

[1995 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தைப் பிரிக்கின்ற யோசனை இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். குறைந்தபட்சம் பெரிய வட்டங்களாக உள்ள அரூர் வட்டம் மற்றும் தென்கனிக்கோட்டை போன்ற வட்டங்களை இரண்டாகப் பிரிக்கின்ற கருத்துரு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில் 234 சட்டமன்ற தொகுதிகள் இருக்கின்றன. அப்படி 234 சட்டமன்ற தொகுதிகள் இருக்கின்றன என்றால் இன்றைக்கு 176 வட்டங்கள் தான் இருக்கின்றன. அப்படியானால் ஏறக்குறைய ஒரு வட்டத்தில் 2 தொகுதி, 1½ தொகுதிகள் எல்லாம் இருக்கின்றன. தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் 10 தொகுதிகள்தான் இருக்கின்றன. ஆனால் 10 தொகுதிகள் இருக்கிறபோது 9 வட்டங்கள்தான் இருக்கின்றன. அவை பெரிய வட்டங்கள் என்று சொல்வதற்கில்லை. இருந்தபோதிலும் சில வட்டங்கள் மிகப் பின்தங்கிய வட்டமாகவும், போக்குவரத்து வசதியில்லாத வட்டமாகவும், கிராமங்கள் மிகத் தள்ளி தள்ளி இருக்கின்ற வட்டங்களை ஆராய்ந்து ஒரு வட்டத்தை இரண்டாகப் பிரிக்காமல், இரண்டு வட்டங்களைச் சேர்த்து மூன்று வட்டங்களாகப் பிரிக்கின்ற ஆய்வை அரசு செய்யும்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் புருஷோத்தமன்.

டாக்டர். ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தை பிரிக்கும் பொழுது தருமபுரி மாவட்டத்தில் 9 வட்டங்கள் உள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலும் பிரிக்கப்பட்ட பகுதி என்று சில தாலுக்காக்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். சில மாவட்டங்களில் 5 தொகுதிகள் இருக்கின்றன. அப்படி தர்மபுரி மாவட்டத்தில் தற்போது 10 தொகுதிகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் பக்கத்திலே உள்ள ஓமலூர், தாரமங்கலம் மற்றும் அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி பகுதிகளை இணைத்து புதிய மாவட்டத்தை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 20]

பிரிக்கும்போது கருத்தில் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பொழுது சேலம் மாவட்டத்தில் இருக்கிற சில இடங்களை குறிப்பிட்டு இருக்கிறார்கள். முதலிலே சேலம் மாவட்டம், தருமபுரி மாவட்டம் இரண்டும் ஒன்றாக இருக்கிற பொழுது தான் தருமபுரி மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டது. அப்பொழுது சேலம் மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாகத்தான் இருந்தது. மாவட்டம் பிரிக்கிற பொழுது, முதலிலே நான் சொல்கிறபொழுது, இரண்டு வட்டங்களை ஒன்றாக சேர்த்து 3 வட்டங்களாக பிரிப்பது என்று சொல்லியதைப் போல, இரண்டு மாவட்டங்களை ஒன்றாகச் சேர்த்து 3 மாவட்டங்களாக பிரிக்கின்ற யோசனையை சொல்கிறபொழுது, அதையும் மக்களுடைய நலன் கருதி, அப்படி சேர்த்து பிரிக்கிற பொழுது மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றால், அதையும் இந்த அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 363, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு உணவு அமைச்சர்.

363—

திருப்பத்தூர் தொகுதியில் நியாய விலைக்கடை திறத்தல்.

27757*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, குடியான்குப்பம் மற்றும் மூன்றாவது வார்டில் நியாய விலைக்கடை திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி